**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 284/2017**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.03.2026 | | |
| பெயர்: | சுந்தரய்யா (DW–4 Chief ) | தகப்பனார் பெயர்: | சுப்பையா |
| கிராமம்: | சீர்காழி டவுன் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வழக்கறிஞர்/ நோட்டரி பப்ளிக் | வயது : | 63/2026 |

**<u>முதல் விசாரணை : 10.03.2026</u>**

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரப்பெற்றது. அதன்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் வழக்கறிஞராக சுமார் 40 ஆண்டு காலம் பணிபுரிந்து வருகிறேன். நான் 2000ம் வருடத்திலிருந்து நோட்டரி பப்ளிக்காக பணிபுரிகிறேன். நான் கடந்த 27.07.2005 ம் தேதியிட்ட கணபதி குமார் கண்ணன் மற்றும் நடேசன் மகன் கோவிந்தராஜூ இடையே நஞ்சை நில அனுபோக சாகுபடி பாத்திய உரிமை மாற்று விக்கிரய சாசன பத்திரம் என் முன்பாக ஏற்பட்டது. அன்று எனது அலுவலகத்தில் இருவரும் நேரில் ஆஜரானார்கள். ஆவணத்தை தரப்பினர்கள் அவர்களாகவே தயார் செய்து கொண்டு வந்தார்கள். கண்ணன் என் முன்பாக ஆவணத்தின் அனைத்து பக்கங்களிலும் கையெழுத்து செய்தார். சாட்சி ஒருவர் கையெழுத்து செய்துள்ளார். பிறகு நான் சான்றுறுதி அளித்து கையெழுத்து செய்தேன். நான் சான்றிட்ட தேதி 27.07.2005 ஆகும். அந்த ஆவணங்களுக்கு நோட்டரி முத்திரை வில்லை ஒட்டப்பட்டு நான் பராமரித்து வரும் ஆவணத்தில்

குறிப்பிடப்பட்டது. கண்ணன் கையெழுத்து செய்யும்போது குமார் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை.

2. அந்த ஆவணத்தின் நோட்டரி சான்றிதழ் எண்.88/2005 ஆகும். ஆவணம் பதிவு செய்து 20 ஆண்டுகள் ஆகிறபடியால் பதிவேடு என்னால் தேடி கண்டுபிடிக்க இயலவில்லை.

<u>குறுக்கு விசாரணை</u>

1. பொதுவாக ஆவணத்தில் குறைந்தபட்சம் இரு நபர்கள் சாட்சி கையெழுத்து செய்தால் தான் அது ஆவணமாக கருதப்படும் என்றால் அப்படியெல்லாம் இல்லை. மரபுப்படி இரு நபர்கள் சாட்சி கையெழுத்து வாங்கி கொள்கிறேன். நோட்டரி சான்றுறுதி அளிக்கப்படும் போது சாட்சி கையெழுத்து தேவை இல்லை. ஆவண எண்.88/2005–ல் சாட்சி கையெழுத்து என்ற இடத்தில் முத்துகுமார் கண்ணன் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தந்தை பெயர் மற்றும் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆவண எண்.88/2005 க்கான பதிவேட்டை தாக்கல் செய்தால் தான் ஆவணம் ஏற்படுத்துபவர்கள் அலுவலகத்திற்கு வந்து ஏற்படுத்தினார்கள் என்று கருத முடியும் என்றால் சரியல்ல.

2. நான் தற்போது சாட்சியம் அளிக்க ஆவண எண்.88/2005 பதிவேட்டை கொண்டு வரவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் தயார் செய்யப்பட்டது என்பதற்காக தான் நான் ஆவண எண்.88/2005 பதிவேட்டை கொண்டு வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் கண்ணன் நேரில் வந்து கையெழுத்து செய்தார் என்பதற்காக அவரது அடையாள அட்டை மற்றும் புகைப்படம் இல்லை என்றால் சரிதான். அதனால் கண்ணன் தான் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து செய்தார் என உறுதிபடுத்த இயலாதபோது அதற்கு ஆதரவாக என்னால் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க வந்த அழைப்பாணையில் ஆவண எண் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் தேதியும், பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. 27.07.2005 ல் எத்தனை நபர்கள் அலுவலகத்திற்கு வந்தார்கள் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான். அதேபோல் 27.07.2005ல் எத்தனை ஆவணத்திற்கு சான்றுறுதி செய்யப்பட்டது என்பது என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான். மேற்கண்ட சங்கதிகளுக்கு விரோதமாக சாட்சியம் அளித்திருப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**